# உளவியல் நோக்கில் சக்தி ஜோதியின் மூங்கிலரிசி வெடிக்கும்

**முனைவர் ஷீபா.செ.,**
**உதவிப் பேராசிரியர்**
**தமிழியல் துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**
**முதுநிலை விரிவாக்க மையம், நாகர்கோவில்,**
**Email Id :** sheebacgs2@gmail.com

105

**ஆய்வுச் சுருக்கம்**

மனித மனம் நனவு, நனவிலி என பிளவு படுவது சமூக நியதிகளுக்குள் குழந்தை உள் நுழையும் போது ஏற்படுகிறது. சமூகத்தின் கட்டுப்பாடுகளால் தன்னில் ஏற்படுகின்ற விழைவுகளை அப்படியே அடக்கி வைத்துக் கொள்ளும் போது அவை நனவிலியலில் சேகரமாகின்றன. அவையே கனவுகளாகவும், படைப்பாகவும் வெளிப்படுகின்றன. கனவிலும், படைப்பிலும் குறியீடாகவும், படிமங்களாகவும் விருப்ப நிறைவேற்றம் நிகழ்கிறது. இவ்விருப்ப நிறைவேற்றமானது பெரும்பாலும் பாலுந்தமாகவே இருக்கின்றன. பெண்ணிற்கு மிகுதியான பாலுந்த முடக்கம் ஏற்படுகிறது. எனவே பெண் படைப்பாளிகளின் படைப்புகளில் மிகுதியாக பாலுந்தமும், பாலுணர்ச்சியும் குறித்த குறியீடுகள், படிமங்கள் வெளிப்படுகின்றன. பெண்ணிற்கு ஆண்குறிப் பொறாமையும், ஏக்கமும் இருக்கின்றன. அவையும் பல்வேறு குறியீட்டு தளங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன. ஆண், பெண் கலவியைக் குறிக்கும் கவிதைகள் மிகுதியாகக் காணப்படுவதற்க சமூக அழுத்தமே காரணம் எனலாம். காதலனைக் கண்டடைவதில் பெண்ணுக்கு இருக்கும் பகையாக தாய் இருக்கிறாள் எனவே தாய்ப் பகை என்பது தந்தைக் காதல் என்பதும் பெண்ணின் இயல்பாக வெளிப்படுகின்றன. சக்திஜோதியின் கவிதைகளில் பாலுந்தமும், கலவியும் கொண்ட மனவிழைச்சு வெளிப்படுவதைக் காணமுடிகிறது. ஆழமும் விரிவும் கொண்ட பாலியல் செயல்பாடானது பெண்ணுக்கு மிக மெதுவாகவே உச்சமடையும் உன்பதை உணர்த்தும் வகையில் கடல், நதி, நீர்ப் பரப்புகள் பாலியல் விழைவின் குறியீடுகளாக அமைகின்றன.

**குறிப்புச் சொற்கள் :** பாலுந்தம், கலவி, விழைவு மனம், ப்ராய்ட், நனவு மனம், நனவிலி மனம், சமூக நியதி.

**முன்னுரை**

கவிதை என்பது பகல் கனவு என்றார் சிக்மண்ட் ப்ராய்ட். மனிதர்கள் அனைவரும் நனவிலி மனத்தில் தேங்கியுள்ள நினைவுகளை கனவுகள் வழியாகவும் படைப்புகள் வழியாகவும் நிறைவேற்றம் செய்து கொள்கின்றனர் என்பதே உளவியலின் அடிப்படையாக அமைகிறது. மனித மனம் குறிப்பிட்ட வயதில் இரண்டாகப் பிளவுபடுகிறது. சமூகத்தின் நியதிகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்பந்தத்தினால் இயல்பான மன நிலை முடக்கப்படுகிறது. இவ்வாறு முடக்கப்படும் எண்ணங்கள் யாவும் நனவிலியலில் சேகரமாகின்றன. இவற்றை நிர்வகிக்கவே இத், ஈகோ, சூப்பர் ஈகோ என்னும் மூன்று நிலைகளில் மனம் செயல்படுகிறது. இத் என்பது விழைவு மனம். மனம் எதையெல்லாம் விரும்புகிறதோ அதையெல்லாம் நிகழ்த்திப் பார்க்க ஆசைப்படுவது. ஈகோ என்பது தன்னிலையை சீராகக் கட்டமைக்கக் கூடியது. சூப்பர் ஈகோ என்பது கட்டளை மனம் எனவும் நெறி மனம் எனவும் கூறப்படுவது. மனதின்

செயல்களை ஒழுங்கமைத்தல் ஆகும். பண்பாடு, நாகரிகம் போன்றவற்றைக் கடைபிடிக்கும் போது இயல்பான மனதின் செயல் முடக்கப்பட்டு அவை நிறைவேறா ஆசையாக புதைகுழியில் வீழ்வது போல நனவிலியில் சேகரமாகும். இவை கனவாகவும், படைப்பாகவும் வெளிப்பட்டு விருப்ப நிறைவேற்றம் அடைகின்றன. அதனால்தான் கனவும் படைப்பும் ஒன்றெனக் கொள்ளப்படுகிறது. கனவின் மூலம் நிறைவேற்றம் அடைதலும் படைப்பின் மூலம் நிறைவேற்றம் அடைதல் நிகழ்தல் வேண்டும். அப்போதுதான் மனம் ஆரோக்கியமாக இருக்க இயலும். மன அழுத்தம் குறைவாக இருப்பதற்கு படைப்பும், கனவும் காரணமாகின்றன. பண்பாட்டு அமைப்பில் பெண்கள், ஆண்கள் என இருபாலினருக்கும் நியதிகள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கடைபிடித்து வாழ நேரும் போது ஆணாயினும் பெண்ணாயினும் இயல்பான மன அடக்கத்தினைக் கடைபிடிக்கின்றனர். இதில் பெண்களுக்கே மிகுதியான கட்டுப்பாடுகள் என்பதால் அவர்களது படைப்புகள் அர்த்தப் பொதிகளாக வெளிப்படுகின்றன. அவ்வாறு சமூகத்தின் பல்வேறு அழுத்தங்களையும் படைப்புகளாக வெளிப்படுத்தும் கவிஞர்களில் ஒருவராகக் கருதத்தக்கவர் கவிஞர் சக்திஜோதி ஆவார். இவருடைய கவிதைகளில் பால் மாறாட்டம் பற்றிய உளவியல் பகுப்பு பற்றி இக்கட்டுரையில் அறிந்து கொள்ள முயலலாம்.

**கவிதையும் கனவும்**

கவிஞன் இவ்வுலகக் காட்சிகளைக் கண்டு தனக்குள் அவற்றை அசைபோட்டு கவிதையாக வெளிப்படுத்துகிறான் என்பதுபொதுவாகக் கூறப்படும் படைப்பு பற்றிய கருத்தாகும். ஆனால் முடக்கப்பட்ட எண்ணங்களின் வெளிப்பாடாகவே விருப்ப நிறைவேற்றமாகவே படைப்புகள் உருவாகின்றன. ஒவ்வொருவரது மன அமைப்பிலும் இத்தகைய அடக்குதல் நிலை காணப்படுகிறது. அதிலும் உரைநடை என்பது இரவுக் கனவாகவும், கவிதை என்பது பகல் கனவாகவும் சுட்டப்படுகிறது. "படைப்பாளிகள் புனைவாக்கத்தில் தெரிநிலைக் கனவு காண்கின்றனர். அதாவது இராக் கனவில் காண வேண்டிய தெரிநிலைக் கனவைப் புனைவில் (பகற்கனவில்) காண்கின்றனர். அதனால் தமது விருப்பத்துக்கு ஏற்ப இந்தக் கனவோட்டத்தை இயக்குகின்றனர். எனவே இந்தக் கனவில் முழுக் கட்டுப்பாடு இவர்கள் நனவுநிலையில் உள்ளது. அப்படியிருந்தும் இந்தப் படைப்பு என்பது கனவே ஆகும்" (தி.கு.இரவிச்சந்திரன், 2019) என்ற கூற்றில் கனவும் கவிதையும் ஒன்றெனக் கொள்வதற்கான கருத்து நிலையை அறிய முடியும்.

**பாலுணர்வும் மனித மனமும்**

மனிதர்கள் இயல்பாகவே அதீதப் பாலுமைத் தன்மையைக் கொண்டு இயங்குபவர்கள் குழந்தை முதலே பாலுந்தத்தினால் சில பழக்கங்கள் குழந்தைகளுக்கு ஏற்படுகின்றன. தாயிடம் பால் குடித்தல் கூட பாலுந்தத்தின் விளைவு என்றே ப்ராய்ட்டின் உளவியல் கூறுகிறது. விரல் சூப்புதல், குறியைப் பிடித்துக் கொள்ளுதல், மலப்புழையில் விரல் நுழைத்தல், குச்சி, பேனா போன்றவற்றை வாயில் வைத்துக் கொள்ளுதல் போன்ற பழக்கங்கள் குழந்தைகளின் பாலுந்தத்தை வெளிப்படுத்துகின்றன. இதனைப் பூந்தசைகள் வழி பாலின்பம் பெறுதல் என்று குறிப்பிடப்படுகிறது. பாலுறுப்பு அல்லாத பிற உடலுறுப்புகளில் பூந்தசைப் பகுதிகளை பாலியல் செயலோடு தொடர்புபடுத்துகிறார் ப்ராய்ட். வாய், காது, மூக்கு, கண்கள், குதம், சிறுநிர் நாளம் போன்றவை பாலின்பத்தில் பெரும் பங்கு கொள்கின்றன (தி.கு.இரவிச்சந்திரன், 2007) என்று குறிப்பிடுகிறார் தி.கு.இரவிச்சந்திரன். இரண்டு வகையான பாலின்ப முறைமைகள் இருக்கின்றன. பாலுறுப்பு சார்ந்த பாலின்பம், பாலுறுப்பு சாரா பாலின்பம் என்பன அவையாகும். குழந்தைப் பாலுந்தமும் இயல்பான வயதில் ஏற்படுகின்ற பாலுந்தமும் வெவ்வேறாகக் கருதத்

தக்கனவாகும். குழந்தைப் பாலுமை என்பதை முன்னின்பம் என்று குறிப்பிடுவர் “பாலின்பத்தைப் பற்றி விவரிக்கும் போது முன்னின்பம் (Fore pleasure) எனும் உள நிகழ்வை அறிமுகப்படுத்துகிறார் ப்ராய்ட். மனிதப் பாலுமையின் சிறப்பிடம் வகிக்கும் முன்னின்பம் பாற்குறி சாராப் பாலுமையின் குறித்த குறிக்கோளாகும்.” (தி.கு.இரவிச்சந்திரன், 2007) என்று தனது நூலில் குறிப்பிடுகிறார் தி.கு.இரவிச்சந்திரன். வேட்கையினை லிபிடோ என்னும் சொல்லாலும் குறிப்பிடுகிறார். மதனப் பகுதிகள் அனைத்தும் பாலுணர்ச்சி இன்பத்தில் கூட்டாக செயல்படுகின்றன.

**பால் மாறாட்டம்**

ஆண், பெண் என்னும் இரு தனித் தன்னிலைகளாக உலகம் பகுக்கப்பட்டிருக்கிறது. ஆண், பெண் என்று அடையாளம் உயிரியல் ரீதியில் அடிப்படையானது என்றாலும் ஆண் தன்மை, பெண் தன்மை என்ற அடிப்படையில் முழுமையான ஆணோ, முழுமையான பெண்ணோ சாத்தியமில்லை என்றே உளவியல் விதிக்கிறது. பெண் தனக்குள் ஆண் குறி ஏக்கத்தை இயல்பாகக் கொண்டிருக்கிறாள். ஆண் தனக்குள் பெண்மைத் தன்மையை கொண்டுள்ளான். முழுமையான ஆண் என்பது இல்லை. பெண் ஆண் குறி இழப்பு உணர்ச்சியைக் கொண்டிருக்கிறாள். எனவே ஆண்குறி ஏக்கமும் அவளிடமிருந்து குறியீட்டுத் தன்மையில் வெளிப்படுவதைக் காணலாம். குழந்தை பொம்மையை விரும்புவதற்கு ஆண்குறி ஏக்க உணர்ச்சியே காரணமாக அமைகிறது. அப்போது அதனை விரும்புவதன் மூலம் தன்னை ஆண் தன்மை கொண்டவளாக பால் மாறாட்டம் செய்து கொள்கிறாள். “ஆண்குறி உணர்பருவம் ஏறக்குறைய இருபால் குழந்தைகளின் இரண்டு வயது முதல் ஐந்து வயது வரைக்குட்பட்ட காலக்கட்ட மன உணர்வு ஓட்டமாக உள்ளது. இந்தப் பருவத்தில் ஆண் குழந்தையின் மனத்தில் நிலவும் தாய்க்காதல், தந்தைப் பகை, ஆண்குறி இழப்புப் பயம், போன்ற மன எண்ணங்களும் பெண் குழந்தையின் மனத்தில் நிலவும் தாய்ப் பகை தந்தைக் காதல், ஆண்குறி இழப்புணர்ச்சி, ஆண்குறிப் பொறாமை போன்ற மன எண்ணங்களும் இருபால் குழந்தைகளின் மனங்களில் கடும் மனச்சிக்கல்களாக உணர்கின்றன” (அரங்க.நலங்கிள்ளி, 2019) என்ற கூற்றானது ஆண், பெண் இருபாலரிடமும் சிறு வயதில் ஏற்படும் பால்மாறாட்ட நினைவுகள் அவர்களது வாழ்வில் கடைசி வரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. பெண்ணிடம் தாய்ப் பகை, தந்தைக் காதல், ஆண்குறி இழப்புணர்ச்சி, ஆண்குறிப் பொறாமை ஆகியன வெளிப்படுகின்றன. நனவிலியால் உந்தப்பட்டு கனவுகளாகவும் படைப்பகளாகவும் இவை வெளிப்படுகின்றன.

**சக்திஜோதி கவிதைகளில் உளவியல் கூறுகள்**

கவிஞர் சக்திஜோதி 2000ஆம் ஆண்டுக்குப் பிந்தைய கவிஞர்களில் குறிப்பிடத்தக்க படைப்பாளிகளுள் ஒருவராவார். இவருடைய பல்வேறு தொகுப்புகள் ஆழ்மனத்து உணர்வுகளை இருண்மையாக வெளிப்படுத்துபவை. பாலுணர்வு குறித்த அவரது கவிதைகளில் தாய்ப்பகை, தந்தைக் காதல் ஆகியன வெளிப்படுகின்றன. ஆணைப் போல் தன்னைக் கருதிக் கொள்ளும் பால்மாறாட்டத்தையும் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. கவிதைகள் மூலமே இதனை நிறைவேற்றிக் கொள்ளும் நனவிலி மன எண்ணங்களாகக் கொள்ளலாம்.

“காட்டுப்பூக்களைச் சூடி
தழையாடை உடுத்து
பழங்களைச் சுவைத்து
அடர்ந்த காட்டில் சுற்றித் திரிந்து



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

பாறைகளின் இடுக்குகளில் உறைபவள்

காட்டுத் தாவரமென

அவனைக் கண்டாள்" (சக்திஜோதி, 2016)

என்ற கவிதையானது அடர்ந்த காடு என்னும் படிமம் குடும்பத்தினைச் சுட்டுகிறது. குடும்ப அமைப்பிலிருந்து தன்னை ஒருவாறு பிரித்துக் கொண்டால்தான் தான் விரும்பும் ஒருவனைச் சந்திக்க முடியும். பாறையின் இடுக்குள் என்பது தாயின் காவல் எனக் கொள்ளத்தக்கது. அப்பாறை இடுக்குகளைக் கடந்து காட்டுத் தாவரமென அவனைக் கண்டாள் என்பது தனக்குள் அவனை உள்வாங்கிக் கொண்டதன் படிமமமாக உணர்த்தப்படுகிறது. காட்டுத் தாவரமென என்பது ஆண்குறிப் பொறாமையினால் விளைவது ஆகும். தழையாடை உடுத்து பழங்கள் சுவைத்து என்ற சொற்களால் அவள் பெண்மையும் காட்டுத் தாவரமெனக் கூறுவதால் ஆண் தன்மையும் பெற்று விடுகிறாள். அடர்ந்த காடு பாறை இடுக்கு ஆகியன தாய்க் காவல் அதனைக் கடத்தல் ஆகியனவற்றை உணர்த்துகின்றன. இவ்வாறு தாயின் காவலை மீறும் பெண் தனக்கான ஆணைக் கண்டடைதல் என்பதை உணர்வெழுச்சி நிலையில் கூறுவதாக அமைகிறது.

"நீரூற்றுவதைப் போல

அவள் பாதங்களில்

முத்தமிட்டான்

அதன்பின்

காட்டுப் புற்களின் வாசனை

அவளை ஈர்க்கத் தொடங்கியது

ஆவியாகாத

சுரப்பின் வாசனையுடன்" (சக்தி ஜோதி. 2016)

என்னும் கவிதை வரிகளிலும் நீர் ஊற்றுதல் என்னும் செயல்பாடு ஆணுடன் கலத்தல் என்பதை உணர்த்துகிறது. முத்தமிடுதல், காட்டுப் புற்களின் வாசனை ஆகியன ஆண் தன்மையை தனக்குள் உணரும் வகையிலானவையாகும். ஆவியாகாத சுரப்பு என்பது பெண்மையின் பாலுந்தத்தின் வெளிப்பாடாக அமைகிறது.

"காற்றின் பேரலைவில்

எல்லையற்று விரிகிறது

உடலுக்குள் கடல்" (சக்திஜோதி, 2016)

என்ற கவிதை கடல் என்னும் படிமம் சுட்டப்படுகிறது. பொதுவாக நீர் நிலைகள் பற்றிய எண்ணங்கள் பாலுந்தத்தை குறிப்பனவாகும். உடலுக்குள் கடல் என்னும சொற்றொடர் உடல் முழுவதும் பாலுணர்ச்சியால் ஆனது என்னும் பூந்தசைகள் மதனப் பகுதிகளாக மாறும் என்னும் ப்ராய்ட்டிக் கருத்தினை ஒத்திருக்கின்றன. காற்றின் பேரலைவில் எல்லையற்றதாக விரிதல் என்பது பாலுணர்ச்சியின் ஆற்றல் பற்றியதாக அமைகிறது.

"எப்போதும் மணக்கிற அலை வெளியில்

ஒரு கணம் தாபம்

மறுகணம் துயரமென

நுரையமிழ்ந்துயர

ஒளிர்ந்து பிரகாசிக்கின்றன

உப்புத் திவலைகள் அவளுக்குள்" (சக்திஜோதி, 2016)

என்னும் கவிதை வரிகள் பாலின்பத்தை அடைந்ததை உணர்த்துகின்றன. உடலுக்குள் உப்புத் திவலைகள் என்பது பாலின்ப முடிவினை கூறுவனவாகும். பாலியல் வேட்கை என்பது இன்பத்தையும் துன்பத்தையும் ஒருசேர தரும் ஒன்றாகக் கருதப்படுவதாகும். அதனால்தான் பாலியல் சார்ந்த உடற் செயல்பாடுகள் உடல் வலியைத் தருவனவாக அமைகின்றன. பாலின்பத்தினையே தாபம், துயரமெனக் குறிப்பிடுகிறது கவிதை. பிறிதொரு கவிதையில் மலை, பள்ளத் தாக்கு எனக் கூறுதன் மூலம் ஆண், பெண் கலவி கூறப்படுகிறது.

"அறிவாயா

நீயும் நானும்

நம்மிலிருந்து நீலமலைகளை எழுப்புகிறோம்

அதன் பள்ளத் தாக்கில்

லில்லி மலர்களைப் பூக்கச் செய்கிறோம்

வெண்மையாகப் பூத்திருக்கும்

அந்தப் பூக்களில் கசிந்திருக்கும் அன்பை

சுவைக்கிறோம்

அப்போது பொலிவுறுகிற

நம் முகங்களில்

நான் உன்னையும்

நீ என்னையும் அடைந்திருப்பதையும்

அப்போது நாம் இல்லாமல் இருப்பதையும்

அறிந்திருக்கிறாயா" (சக்திஜோதி, 2016)

என்னும் கவிதை ஆண், பெண் கலவியைப் பற்றியதாக அமைகிறது. ஆண்குறிப் பொறாமையின் வெளிப்பாடாக நீல மலை பற்றிய படிமம் குறிப்பிடப்படுகிறது. அதே போல் ஆண், பெண் கலவியினால் குழந்தைகள் உருப் பெறுவதே நோக்கமாக அமையும் அதனைத்தான் லில்லி மலர்களைப் பூக்கச் செய்கிறோம் என்ற கவிதை வரி உணர்த்துகிறது. குழந்தையின்பால் கொள்ளும் அன்பில் ஆண், பெண் இருவரும் லயித்திருத்தல் என்பதில்தான் ஆண் தன்மையும், பெண் தன்மையும் முழுமையாக இல்லாமல் போய் விடுவதைக் குறிப்பிடுவதாக நம் முகங்களில் நான் உன்னையும் நீ என்னையும் அடைந்திருப்பது என்னும் வரிகள் கூறுகின்றன. ஆண், பெண் தன்மை குறைந்து காணாமல் போவதையே இக்கவிதையில் காணமுடிகிறது. முழுமை என்ற ஒன்று ஆணிடமும் பெண்ணிடமும் இல்லை என்பதால்தான் முழுமை என்னும் தலைப்பில் இக்கவிதை அமைகிறது.

ஆண் பெண்ணாதல், பெண் ஆணாதல் என்னும் பெருவிருப்பம் நனவிலியில் தேங்கியிருந்து வெளிப்படுவதாகும்.

"உடலிலிருந்து

நதிகள் பெருக்கெடுப்பதாக

நம்புகிற அவளுக்கு

கடல் பார்த்தலும்



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

கடற்பயணமும் மிக விருப்பமானவை.
தற்செயலாகத்தான்
கடலின் விரிவும் ஆழமும் பற்றிச்
சிந்திக்கத் தொடங்கினாள்
அதன் பின்பே எல்லாம் நிகழ்ந்தன.
வேறு திசை நோக்கிய பார்வையையும்
நிலவின் பாடலையும்
கனவின் உன்மத்தத்தையும்
வெளியின் சூனியத்தையும்
ஒருசேர அறிந்து கொண்டது
கடலின் வெளியில்" (சக்திஜோதி, 2016)

என்னும் கவிதை வரிகளில் உடல் பாலுந்தத்தினால் பிரவாகமெடுக்கும் என்பதை குறியீட்டு மொழியில் உணர்த்துவதை அறியமுடிகிறது. நதிகள் பெருக்கெடுப்பதாக என்பது பாலுந்த உணர்ச்சியின் வெளிப்பாடாகும். கடற்பயணம் பெண்டிர் செல்வதில்லை என்பதை தொல்காப்பியம் முந்நீர் வழக்கம் மகடூஉ இல்லை என்கிறது. ஆனால் கடற் பயணம் விருப்பம் என்று கூறுவதன் மூலம் ஒரு பெண் ஆண் தன்மையினைப் பெறும் தருணமாக சித்திரம் பெறுகிறது. பாலுணர்ச்சியையே இக்கவிதை முழுக்க முழுக்கப் பேசுகிறது. பாலுணர்ச்சியின் மூலம் பெறும் இன்பத்தின் தன்மையை அறிந்து கொள்ளும் ஆற்றல் விரிவும் ஆழமும் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினாள் என்னும் சொற்றொடர்கள் கூறுகின்றன. வேறு திசை நோக்கிய பார்வை, நிலவின் பாடல், கனவின் உன்மத்தம் ஆகியன பாலியல் தன்மையிலான செயல்களைக் குறிக்கின்றன. கடல் வெளியில் பயணிக்கத் தொடங்குதல் என்பது பால் உணர்வினால் உந்தப்பட்டு அச்செயல்பாடுகளினால் பூந்தசைகளின் இன்பத்தை அடைதல் ஆகும். கனவின் மூலமும் அதை அடைதல் என்பதாகவும் நேரடியாக அடைய இயலாத போது அவ்வாறே அதாவது வேறு திசையில்தான் அடைய முடியும் எனவும் கவிதைகள் உணர்த்துகின்றன.

இவ்வாறு கவிதைகளில் பெண்ணின் நனவிலியில் தேங்கியிருக்கும் பாலுந்தங்கள் வெளிப்படும் வகையில் அமைகின்றன. பெண் பாலியல் தன்மை என்பது சமூக பண்பாட்டுத் தன்மைகளால் ஒடுக்குதலுக்கு உள்ளாகிறது எனவே அது கனவிலும், படைப்பிலும் நிறைவேற்றம் கொள்ளத் தக்கதாக அமைகிறது. பாலியலை நேரடியாகப் பெண் பேசி விட முடியாது. கவிதைகளில் பெண்ணின் பாலியல் உந்தம் மிகுதியாக வெளிப்படும் வகையில் அமைவது தற்செயலானது அல்ல.

**முடிவுரை**

பண்பாட்டு வாழ்வியல் ஒடுக்குதலுக்கு உள்ளாகும் சிந்தனைகள் பாலியல் விழைவுகளாகவே பெரும்பாலும் இருக்கின்றன. அதிலும் பெண்ணிற்கு இருக்கின்ற பண்பாட்டுக் கட்டுப்பாடுகள் மிகுதியான அடக்குதலினால் மன அழுத்தம் ஏற்பட வழி வகுக்கும். கவிதைகளாலும், கனவினாலும் பாலுந்த விழைவுகள் நிறைவேற்றம் அடைகின்றன. கவிஞர் சக்திஜோதியின் கவிதைகளில் பெண் பாலுணர்ச்சிகள், விகசிப்புகள், பாலுந்த தன்மைகள், ஆண்குறிப் பொறாமை, பெண்ணின் ஆண் தன்மை ஆகியன வெளிப்படுவதைக் காணமுடிகிறது. பெண் படைப்பாளிகளின் கவிதைகள் ஒரு வகையில் பாலுந்தத்தின் குறியீடுகளாகவும் படிமங்களாகவுமே வெளிப்படுகின்றன. பாலுணர்ச்சியை கட்டுப்படுத்தும் வகையிலான சமூக அமைப்பே

தாய்ப் பகையை ஏற்படுத்துகிறது. தந்தைக் காதலானது காட்டுத் தாரவமாகவும், மலைகளாகவும் வெளிப்படுகிறது. மூங்கிலரிசி வெடிக்கும் பருவம் என்னும கவிதை நூலின் வழி பாலுந்த விழைச்சினையே குறியீடாகவும் படிமமாகவும் கவிஞர் வெளிப்படுத்துகிறார் எனக் கொள்ளலாம்.

**துணைநூற்பட்டியல்**

1. தி.கு.இரவிச்சந்திரன், சிக்மண்ட் ப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல், அலைகள் வெளியீடு, சென்னை, 2007
2. தி.கு.இரவிச்சந்திரன், காப்பிய உளப்பகுப்பாய்வு, பிறழ் வெளியீடு, மதுரை, 2019
3. அரங்க. நலங்கிள்ளி, சங்க இலக்கியம் ஒரு ப்ராய்டிய உளப்பகுப்பாய்வு வாசிப்பு, பரிசல் வெளியீடு, சென்னை, 2019.
4. சக்திஜோதி, மூங்கிலரிசி வெடிக்கும் பருவம், டிஸ்கவரி புக் பேலஸ், சென்னை, 2016.